# 16

# அறிவுரைகளும் பாராட்டுகளும்

## [4:7–9]

*பவுல் சபைகளுக்கு எழுதின நிருபங்களில், அவர் தனது நிறைவு உபதேசங்களையும் சில வேளைகளில் தனது உடன் வேலைக்காரர்களின் (ஊழியர்களின்) வாழ்த்துக்களையும் கொடுத்து நிருபத்தை முடிப்பார், கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் மாத்திரம் அதிகமான தனிப்பட்டக் குறிப்புகளையும் விமர்சனங்களையும் தன்னோடு இருப்பவர்களைக் குறித்து வழக்கத்துக்கு மாறான முறையில் எழுதுகிறார். இந்த நிருபத்தைக் கொண்டு போனவர்களும், அவருடைய தனிப்பட்ட செய்தியாளர்களுமாயிருந்த தீகிக்கு மற்றும் ஒநேசிமுவைப் பெயர் குறிப்பிட்டு பாராட்டினார் (வசனங்கள் 7-9). பிறகு அவர் தன்னோடிருக்கும் ஆறுபேர்களை வரிசைப்படுத்தி கொலோசெ சகோதரர்களுக்கு வாழ்த்துக்களைச் சொல்வதாகக் குறிப்பிடுகிறார் (வசனங்கள் 10-14). லவோதிக்கேயா சபைக்கு வாழ்த்துக்களைச் சொல்லுகிறார், அத்துடன் நிம்பாவையும் அவளுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும், அர்க்கிப்புவுக்கு அறிவுரைகளையும் கூறுகிறார் (வசனங்கள் 14-17). பவுல் தனிப்பட்ட ரீதியிலான வாழ்த்துக்களுடன் கொலோசெ நிருபத்தை நிறைவு செய்கிறார் (வசனம் 18).*

*பவுல் தன்னையும் தன்னோடிருப்பவர்களையும் உயர்வான தலைவர்களாகவோ அல்லது மதிப்புமிகு மற்றும் கனம் பொருந்திய உயர்அதிகாரிகளாகவோ ஸ்தானத்தில் மற்ற கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலான புனிதம் நிறைந்தவர்களாவோ விவரித்துக் கொள்ள வில்லை, மனுஷர்களை உயர்த்துவது குறித்து இயேசு எதிர்த்துப் பேசினார் (மத்தேயு 23:6-12). தமது சீஷர்களில் பெரியவனாயிருக்க விரும்புகிற எவனும் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யக் கடவர்கள் என்று சொன்னார். தன்னோடு பிரயாசப்பட்டவர்களை உண்மையுள்ள ஊழியக்காரர்களாக, உடன் வேலைக்காரர்களாக, அடிமைகளாக பவுல் விளக்கப்படுத்தினார் (1:7; 4:7, 12), இது தன்னோடு ஊழியஞ்செய்து கொண்டிருந்தவர்களைக் குறித்தும் தன்னைக் குறித்தும் பவுல் கொண்டிருந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இந்த ஊழியர்களோடு தன்னை பவுல் குறிப்பிட்டு "உடன்" வேலையாள் என்று குறிப்பிட்டு; தனது பெயருடன் அவர் எந்த ஒரு பட்டத்தையும் விசேஷம ாக சேர்த்துக் கொள்ள வில்லை, அல்லது தான் அவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்பதாகக் காட்டிக்கொள்ள வில்லை.*

### *தீகிக்குவுடன் சம்பந்தப்படுத்தி (4:7, 8)*

**7 பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என்**

***செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான். [8]உங்கள் செய்திகளை அறியவும், உங்கள் இருதயங்களைத் தேற்றவும், [9]அவனையும் உங்களில் ஒருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும் உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.***

***"பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும் கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்தி களையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்" (4:7)***

*பவுலின் நிருபத்தை கொலோசெயர்களிடம் பட்டுவாடா செய்ய இரண்டு முகவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் - ஒரு சுயாதீனன் **தீகிக்கு,** மற்றும் ஒரு அடிமை ஒநேசிமு. தனிமையாய் ஒருவன் பயணம் பண்ணுவதைக் காட்டிலும் இரண்டுபேர் செல்லும் போது பெரிதான பாதுகாப்பை பெற்றிருப்பார்கள், மேலும் இரண்டு பேரும் சேர்ந்து பவுலின் செய்திகளை இன்னும் முழுமையாக கொடுப்பதற்கு வாய்ப்பாயிருந்திருக்கக் கூடும். அவருக்கும் அவர்களுக்கும் இடையே இருந்த பரஸ்பர அன்பு பவுலைப் பற்றிய செய்தியைக் கொண்டு செல்ல இவர்களை நல்ல தூதுவர்களாக்கியது.*

*தீகிக்கு என்றால் "சந்தர்ப்பம்" அல்லது "வாய்ப்பு" என்று பொருள், அவன் ஆசியா முனையைச் சேர்ந்தவனும் சிறிதளவே அறியப்பட்ட பவுலின் கூட்டாளியுமாயிருந்தான். நடபடிகள் 20:4ல் இவனைக் குறித்து லூக்கா முதலாவதாகக் குறிப்பிடுகிறார், ஆனாலும் எங்கே எப்பொழுது பவுலுடன் சேர்ந்து கொண்டார் என்று வெளிப்படுத்தவில்லை. பவுல் தனது மூன்றாவது சுவிசேஷப் பயணத்தை நிறைவு செய்து மக்கதொனியா வழியாக திரும்பிக் கொண்டிருக்கும்போது அவன் பவுலுடன் இருந்ததாகத் தெரிகிறது, ஆசியா முனையிலிருந்த துரோவாவுக்கு* Sopater, Aristarchus, Secundus, Gaius, *மற்றும்* Timothy *ஆகியோருடன் பவுலுக்கு முன்னே பயணம் பண்ணிப்போனான். மக்கதோனியா வழியாக பயணம் பண்ணின பின்பு தனது மூன்றாவது சுவிசேஷப் பயணத்தில் நிறைவில், வரவிருந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் எருசலேம் போய்ச் சேரவும் (நடபடிகள் 20:16), தீகிக்குவையும் மற்றவர்களையும் பவுல் எருசலேமிலிருக்கிற சபைக்கு வெகுமதிகளைக் கொடுக்கும்படி கூட்டிக் கொண்டுபோனார், எருசலேமிலிருந்த சபையில் தேவையுடையோருக்காக அவர் (பவுல்) சேகரித்த நிதிகளை தீத்துவுடன் கொண்டுபோன உயர்ந்த மதிப்புடைய சகோதரனாக அவன் (தீகிக்கு) கருதப்பட்டான் (காண்க நடபடிகள் 24:17; 1 கொரிந்தியர் 16:3; 2 கொரிந்தியர் 8:16-19).*

*தனது முதல் காவலின்போது ரோமாபுரியில் இந்த நிருபத்தை எழுதுகையில், தீகிக்கு உடனிருந்தான் (எபேசியர் 6:21). மேலும் அவருடைய இரண்டாவது காவலின்போதும் அவன் அவருடன் இருந்தான் (2 தீமோத்தேயு 4:12; தீத்து 3:12). பவுலுடன் இருக்கும்படிக்கு எப்படி அல்லது எப்பொழுது தீகிக்கு ரோமாபுரிக்குப் போனான் என்று லூக்கா சொல்லவில்லை.*

*தீகிக்குவுக்கு பவுலிடத்தில் உயர்ந்த மதிப்பு இருந்தது, அவர் அவனைக் குறித்து **பிரியமான சகோதரன், உண்மையுள்ள ஊழியக்காரன் மற்றும் உடன் வேலையாள்** என்று சொன்னார், "மேலும் பிரியமான சகோதரன்*

*உண்மையுள்ள ஊழியக்காரன்" என்று (எபேசியர் நிருபத்திலும்) எழுதினார் (எபேசியர் 6:21).* பவுல் தனது சகக் கிறிஸ்தவர்களை "சகோதரர்கள்" அல்லது "சகோதர சகோதரிகள்" என்று அடிக்கடி குறிப்பிடுவது உண்டு (1:1, 2; 4:7, 9, 15; 1:1ல் விவாதிக்கப்படும் கருத்தைக் காண்க).

இந்த நிருபத்தில் பவுல் தீகிக்குவை பிரியமான சகோதரன் என்று குறிப்பிட்டார் (4:7); மேலும் வேறு நான்கு பேரை அப்படிக் குறிப்பிட்டார் - எப்பாபிராதீத்து (1:7), ஒநேசிமு (4:9), மேலும் லூக்கா (4:14); மற்றும் இயேசுவுக்கு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (1:13). சில வேளைகளில் கிறிஸ்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் குறிப்பிட்ட சிலரிடத்தில் அதிகமான பிரியத்தையும் ஆழமான அன்பையும் காட்டுவது சரிதானா என்று கேள்வி எழுப்பப்படுவதுண்டு. பவுலும் அதே போல நமது கர்த்தரும் அப்படிச் செய்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. (இது அவர் அப்போஸ்தலனாகிய யோவானிடத்தில் காட்டின அன்பில் காணப்படுகிறது; யோவான் 20:2; 21:7, 20.)

தீகிக்குவை மட்டுமே பவுல் ஒரு "உண்மையுள்ள ஊழியக்காரன்" *(pistos diakonos)* என்றும் "faithful minister" (NIV) என்றும் அழைத்தார். "உண்மையுள்ள" என்பது "நம்பிக்கைக்குரிய" அல்லது "ஒப்புக்கொடுத்த" என்று பொருள்.

ஒரு விசுவாசமுள்ள செய்தியாளனாக, தீகிக்கு எபேசுவிலே கொண்டுபோய் பவுலின் நிருபத்தைக் கொடுக்க ஏதுவான நம்பிக்கையைப் பெற்றிருந்தான் (எபேசியர் 6:21). அன்று பவுலுக்கு இப்போதிருக்கிற அஞ்சலகசேவை வசதி இருக்க வில்லை, எனவே அவர் நம்பிக்கைக்குரிய தனி நபர் தனது நிருபத்தைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய நிலையில் இருந்தார். சில காலத்துக்குப் பின்னர் பவுல் தீமோத்தேயுவின் இடத்தில் ஊழியம் செய்ய அல்லது அவனுக்கு சற்று விடுப்பு அளிக்கக்தக்கதாக தீகிக்குவை எபேசுவுக்கு அனுப்பினார் (2 தீமோத்தேயு 4:12). மேலும் அவனோ அல்லது அர்தெமாவோ கிரேத்தாத் தீவில் தீத்துவுக்குப் பதிலாக ஊழியம் செய்ய அனுப்ப பவுல் திட்டமிட்டார், இதினால் தீத்து நிக்கோப்போலிக்குப் போய் பவுலுடன் மாரிகாலத்தில் இருக்க ஏதுவாகும் (தீத்து 3:12).

*(Diakonos)* வேலைக்காரன் என்பது "ஊழியக்காரன்" என்றும் "உதவிக்காரன்" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடும். பவுல் உதவிக்காரர்களின் சேவையை அர்த்தப்படுத்தத்தக்க வகையில் மூன்றுமுறை இதைப் பயன்படுத்தினார் (பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:8, 12), மற்றபடி, இங்கே சொல்லப்படுவது போல, இதன் பொருள், ஊழியஞ் செய்பவன் அல்லது வேலைக்காரன். பவுல் அநேகமாக அவனுக்கு என்ன தகுதி அடிப்படையில் பணியாற்ற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டாலும் அவன் உண்மையாக அதிலே ஈடுபட்டான் என்று சொல்லியிருக்கலாம்.

பவுல் இங்கே "உடன் - ஊழியக்காரன்" எனும் பொருளில் *(sundoulos)* எனும் பதத்தை முன்பு எப்பாபிராவுக்கும் பின்பு தீகிக்குவுக்கும் பயன்படுத்தினார். இது ஒரு தொகுப்பு வார்த்தை: *sun*, "உடன்," கூட்டல் *doulos*, "அடிமை" அல்லது "ஊழியக்காரன்." இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (காண்க மத்தேயு 18:28; 24:49), அதே போல யோவானும் எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 6:11; 19:10; 22:9). பவுல் தன்னை

*இயேசுவின் அடிமை என்றும், தீகிக்குவை கர்த்தருக்குள் தன் உடன் ஊழியன் என்றும் குறிப்பிட்டார். மற்ற கிறிஸ்தவர்ளுடனே கூட, பவுலும் தீகிக்கும் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருந்தார்கள்; இப்படியாக, உடன் ஊழியக்காரர்களாக அவருக்குச் சொந்தமானார்கள்.*

*இரண்டும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருந்தாலும்,* **கர்த்தருக்குள்** *எனும் சொற்றொடரை "கிறிஸ்துவுக்குள்" என்பதைக் காட்டிலும் குறைவாக பவுல் பயன்படுத்துகிறார் (காண்க 1:2, 4, 28; 2:5). தீகிக்கு "கர்த்தருக்குள்" இருந்தபடியால், அவன் புது சிருஷ்டியாயிருந்தான், சபையாகிய ஒரே சரீரத்திற்குள், விசுவாசமுள்ள கூட்டத்துக்குள் இருந்தான். பவுல் இந்த வித்தியாசத்தைக் காட்டி, அதினால் தீகிக்கு தன்னோடு பயணம் பண்ணி தன்னோடு ஊழியம் செய்தவன் மட்டுமல்ல, மாறாக அவன் ஒரு உடன் விசுவாசியுமானவன் எனக் குறிப்பிட்டார்.*

***"உங்கள் செய்திகளை அறியவும் உங்கள்***
***இருதயங்களைத் தேற்றவும் அவனையும் ...***
***உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்" (4:8)***

*தீகிக்குவின் வருகையின் நோக்கங்களில் ஒன்று* **அவன்** *[அவர்களின்]* **இருதயங்களைத் தேற்றுவான்.** *"தேற்றுவான்" (parakaleō) என்பது ஒரு தொகுப்பு வினைச்சொல், para "என்பதுடன்," kaleō "அழைத்தல்." இதன் அடிப்படைப் பொருள் ஒருவரை தனக்குப் பக்கத்தில் வரச் செய்வது, அதாவது, பலமாக வற்புறுத்துதல் (நடபடிகள் 16:39; 28:20; ரோமர் 12:1; 1 கொரிந்தியர் 1:10). தைரியத்தையும் ஆறுதலையும், கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குள் கொடுப்பதைக் குறிப்பிடுவது (2 கொரிந்தியர் 1:4; 7:6; கொலோசெயர் 2:2; 4:8). Paraklētos, என்பது அதே வார்த்தையின் மற்றொரு அமைப்பு, பரிசுத்த ஆவிக்குப் பயன்படுத்தப்பட்டது (யோவான் 14:16, 26; 15:26; 16:7) மற்றும் இயேசுவுக்கும் பயன்படுத்தப்பட்டது (1 யோவான் 2:1), இதன் பொருள் உதவியாளராக இருந்து வழிநடத்தும்படி கூடவே இருப்பவர் என்று பொருள்.*

**அனுப்பியிருக்கிறேன்** *(epempsa) என்பது நிறைவேற்றப்பட்ட செயலைக் குறிக்கிறது. நிருபத்தை வாசிப்பவர்களின் கோணத்தில் பவுல் எழுதுகிறார். நான் "அவனை அனுப்புகிறேன்," நிகழ்காலத்தில் குறிப்பிட்டிருக்கலாம், அது தான் எழுதின காலத்தை குறிப்பிடுவதாக இருந்திருக்கக் கூடும்; ஆனால் தீகிக்கு ஏற்கனவே கொலோசெயில் இருந்திருக்கிறான், அப்பொழுது இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்ட அவர்கள் அதை வாசித்திருக்க வேண்டும். இந்தக் காரணத்தால் பவுல் அவர்கள் பக்கத்து கோணத்தில் எழுதினார், தனது கோணத்தில் அல்ல.*

## *ஒநேசிமுவுடன் சம்பந்தப்படுத்தி (4:9)*

***9 அவனையும், உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும், உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச் செய்திகளை யெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.***

***“உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனாகிய, ஒநேசிமு என்பவனையும்” (4:9)***

*ஒநேசிமு தீகிக்குவுடனிருந்தான். இந்தப் பெயர் “பயனுள்ளது” அல்லது “பிரயோஜனமுள்ளது” என நேரடிப் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுல் இங்கே வார்த்தை ஜாலத்தை பயன்படுத்துகிறார், அவர் எழுதிய போது தனது எஜமானனுக்கு ஒநேசிமு முன்பு “பிரயோஜனமில்லாதவனும்” “பயனற்றவனுமாயிருந்தான்” ஆனால் இப்பொழுது அவனுக்கும் பவுலுக்கும் “பயனுள்ளவனாகவும்” “பிரயோஜனமுள்ளவனாகவுமிருக்கிறான்” (பிலேமோன் 11, 20). வேலைக்காரர்களுக்குள் அவனுடைய பெயர் விசேஷமாக பொதுவானது, இது சிலரை பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் விவாதிக்கப்படும் வேலைக்காரன் இவன்தானா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. பிலேமோனில்பேசப்படும் நபர் இவனாக இருக்கலாம், ஏனெனில் அந்த நிருபத்திற்கு அவனுடைய பெயராகிய பிலேமோனையே முதலாவதாக வைத்தார், அதன் பொருள் பிரதானமாக அவனுக்கே எழுதப்பட்டதாக சுட்டிக் காட்டுகிறது, வேறுசிலர் அவன் அப்பியாவுக்கும் அர்க்கிபுவுக்கும் வேலைக்காரனாயிருந்தவனாதலால், பிலேமோனுக்கு எழுதியவைகள் அடிப்படையில் அவர்களுக்கும் சேர்த்து எழுதப்பட்டதுதான் என்கின்றனர் (பிலேமோன் 2).*

*தீகிக்குவைப் போலின்றி, ஒநேசிமு எபேசியர் நிருபத்தில் சேர்க்கப்பட வில்லை அல்லது “ஊழியக்காரன்” என்றும் குறிப்பிடப்படவில்லை (காண்க 4:7; எபேசியர் 6:21). இது ஒருவேளை அவன் சுவிசேஷப் போதகனாயிராமல் ஒரு எளிமையான விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருந்திருக்கலாம் - அல்லது பவுல் அவனை ஒரு வேலைக்காரனாக நினையாமல் அல்லது பூமிக்குரிய எஜமானனுக்கு அடிமையாக நினையாமலிருக்க ஒருவேளை அப்படிச் செய்திருக்கலாம்.*

*கொலோசெயர்கள் ஒநேசிமுவை ஒரு கிறிஸ்தவனாக அறிந்திராமல்ஓடிப்போன ஒரு அடிமையாக மட்டுமே அறிந்திருக்கலாம் (பிலேமோன் 10-20). பவுல் அவனைக் குறித்துக் குறிப்பிடுகிறபடி ஒநேசிமு ஒரு உண்மையற்ற அடிமையாயிருந்தவன்* ***உண்மையும் பிரியமுமான சகோதரனாக*** *மாறியிருந்தான். இந்தப் பதங்கள் அவனுக்கு கனத்தையும் மதிப்பையும் கொடுத்தது, ஏனெனில் மற்றவர்களைக் குறிப்பிடுவது போலவே அதே அன்பு மிக்க வார்த்தைகளை அவனுக்கும் பயன்படுத்துகிறார். ஒருவேளை கொலோசெயர்கள் எஜமானர்களையும் சுயாதீனர்களையும் அன்புகூருவது போல அடிமைகளிடத்திலும் தங்களுடைய சக கிறிஸ்தவர்களாக அன்பு கூரும்படி வலியுறுத்தப்பட்டதாயிருக்கலாம்.*

*அப்போஸ்தலனான பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டிருக்கையில் ஒநேசிமு மனமாற்றப்பட்டிருக்க வேண்டும். இந்த உண்மை “என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்” என்று அவர் சொன்னதிலிருந்து இந்த உண்மை தெரிய வருகிறது (பிலேமோன் 10). பவுல் அவனுடைய உதவியை விருப்பப்பட்டிருந்த போதிலும், அவனுடைய எஜமானனின் அனுமதியின்றி அவனைத் தன்னோடு வைத்துக் கொள்ள விரும்ப வில்லை, எனவே ஒநேசிமுவை அவனுடைய எஜமானனிடத்தில்*

*திருப்பி அனுப்பினார். பிலேமோனுக்கு எழுதிய அவருடைய நிருபத்தில், பிலேமோன் அடிமையானவனாக அல்ல, கர்த்தருக்குள் பிரியமுள்ள சகோதரனாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று பவுல் வேண்டிக் கொண்டார். பண விஷயத்தில், ஒநேசிமு ஏதாவது பணத்தை எடுத்திருந்தாலோ அல்லது அவன் இல்லாததால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருந்தாலோ, பவுல் அந்தப் பணத்தைத்திருப்பிக் கொடுக்க விருப்பமாயிருந்தார் (பிலேமோன் 18, 19). பிலேமோன் நிருபம் பாதுகாக்கப்பட்டிருப்பதிலிருந்தே, ஒநேசிமு விடுதலையாக்கப்பட்டிருந்தான் என்றும் சுட்டிக்காட்டக் கூடும்.*

*பவுல் ஒநேசிமு குறித்து, "என் மகன்," எனக்கும் ... "பிரயோஜனமுள்ளவன்," "என் உள்ளம் போல் இருக்கிறவன்" "பிரியமான சகோதரன்" என்றெல்லாம் குறிப்பிட்டு தனது பாராட்டை தெரிவித்துக் கொண்டதோடு "எனக்கு ஊழியஞ்செய்யும்படி (அவனை) என்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன்" என்றும் குறிப்பிட்டார் (பிலேமோன் 11-13, 16). "உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன்" எனும் சொற்றொடர் ஒநேசிமுவை தயவுடன் கொலோசெயர்களைப் பார்க்கச் செய்தது, மேலும் அவனை தங்களுடைய ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளவும் செய்தது, அவன் ஓடிப்போன அடிமையாக அல்ல, கிறிஸ்துவுக்குள் சகோதரனாக பாவித்து ஏற்றுக்கொண்டனர். அவன் ஓடிப்போயிருந்தாலும், இப்போது அவர்கள் அவன் மேல் நம்பிக்கையாயிருக்க முடிந்தது, அடிமைகளும் சுயாதீனர்களும் ஒன்று போலவே தேவனுடைய பிள்ளைகள் ஆகக் கூடும் (கலாத்தியர் 3:26-28).*

*கொலோசெயர்கள் ஒநேசிமுவை (தங்களில்)* ***ஒருவனாக*** *அறிந்திருந்தார்கள் என்பது தெளிவாகிறது. பவுல் குறிப்பிட்டதன் பொருள் இதுதான் என்றால், பிலேமோன் - ஒநேசிமுவின் எஜமானன், அல்லது முந்தைய எஜமானும் கூட - கொலோசெயைச் சேர்ந்தவனாக இருந்திருக்கலாம். ஆகிலும் இது புரிந்து கொள்ள இயலாத ஒன்றாக இருக்கிறது, ஏனெனில் பிலேமோன் கொலோசெயில் வாழ்ந்திருந்தால், பவுல் தனது கொலோசெயர் நிருபத்தில் வாழ்த்துதல் சொல்லும் போது ஏன் அவனையும் பெயர் சொல்லி வாழ்த்தவில்லை? அவர் அவனை தன்னுடைய வாழ்த்துதலில் சேர்த்துக் கொள்ளாமைக்குக் காரணம், அதே பயணத்தில் ஒநேசிமு தனிப்பட்ட ஒரு கடிதத்தை பிலேமோனிடத்தில் கொடுத்ததால்தான் என்று சிலர் யூகமாகச் சொல்லுகின்றனர்.*

***"அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்" (4:9)***

*பவுல் தீகிக்குவை கொலோசெயர் நிருபத்துடன் அனுப்புகையில் இரண்டு நோக்கங்கள் இருந்தன: பவுலின் வாசகர்களை தேற்றுவதும் பவுலின் நிலைமைகளை லீகஸ் பள்ளத்தாக்கில் உள்ள சகோதரர்களுக்கு அறிவிப்பதுமே, அப்போஸ்தலன் தனது நிருபத்தைக் கொண்டு போன இருவருடைய பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை தன்னுடன் இருப்பவர்களின் வரிசையில் முன்பதாகக் குறிப்பிட்டார், அவர்கள் ரோமில் அவர் (பவுல்) எப்படியிருக்கிறார் என்று அறிவிப்பார்கள், என்று குறிப்பிட்டார். பவுல் காவலில் வைக்கப்பட்டிருந்த செய்தியை அறிந்திருந்தார்கள் ஆனாலும் அங்கு அவருக்கு இருந்த சூழ்நிலையை சிறிதளவே அறிந்திருக்க வாய்ப்பு இருந்தது.*

காவலில் வைக்கப்பட்ட போதிலும், பவுலின் தைரியத்தையும் வெற்றியையும் குறித்த செய்தி அவர்களை உற்சாகப்படுத்தக் கூடும். செய்தியைக் கொண்டு போனவர்களின் நோக்கத்தைக் குறித்து பவுல், மூன்றுமுறை குறிப்பிடுகிறார். முதலாவதாக, "தீகிக்கு ... என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்" என்றார் (4:7). பிறகு, அவர் "உங்கள் இருதயங்களை தேற்றுவான்" என்பதற்காகவே தீகிக்கு அனுப்பப்படுகிறான் என்று சொன்னார் (4:8). மூன்றாவதாக, **அவர்கள்** (தீகிக்கு மற்றும் ஒநேசிமு) **இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்** என்று சொன்னார்.

பவுல் அங்கிருந்த சூழ்நிலையின் விவரம் குறித்து எந்த தகவலையும் தன் நிருபத்தில் தெரிவிக்க வில்லை. விளக்கமாய் எழுதப்பட்ட கடிதத்தில் காவலின் விரும்பத்தகாத நிலைகளைக் கொண்டிருக்குமானால், நிருபம் வழியில் கைப்பற்றப்பட்டிருந்தால், (யாருடைய கையிலாகிலும் கிடைத்தால்) அது அவர்களை வேதனைப்பட நடத்தவும் ஆபத்துக்குரியதாக்கியிருக்கவும் கூடும். ஆகிலும், இந்தக் கோணம் ஏற்புடைய ஒன்றல்ல, ஏனெனில் ரோமில் அவர் நன்கு நடத்தப்பட்டிருந்தார். லூக்கா "நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடுத்தான்; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக் கொண்டான்" என்று எழுதினார் (நடபடிகள் 28:16). "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" (நடபடிகள் 28:30, 31), என்றும் சொன்னான்.

அநேகமாக, கொலோசெயர்கள் ஏதோ நடைமுறைச் சம்பவங்களை அறிந்துகொள்வதைக் காட்டிலும் ஒரு முழுமையான நடவடிக்கைகளை தனது நிருபத்தில் சேர்க்கப்பட்டு அறிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விருப்பப்பட்டார். வாய்மொழியாக சொல்லப்பட்ட சங்கதிகளை முழுமையாய்க் கேட்டறிந்த பின்பு, நிருபத்தைப் பெருபவர்கள் வேறு விளக்கங்களையும் பவுலின் நிலைக்குறித்தும் கேள்விகேட்டு தெரிந்துகொள்ளக்கூடும். எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் கூட பவுல் குறிப்பிடுகையில் செய்திகளையெல்லாம் முழுமையாக தீகிக்கு அறிவிப்பான் என்று குறிப்பிட்டார் (எபேசியர் 6:21).

அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்ததால், சிறைச்சாலையில் ஒரு அறையில் வைக்கப்பட்டிருப்பதைக் காட்டிலும் அவரது சூழ்நிலை சிறப்பு மிக்கதாயிருந்தது. அவர் தாங்கமுடியாத சிறைச்சாலைக் கண்டிப்புக்களால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடும் என்ற கொலோசெயரின் (வேதனை) மனதை விடுதலை அளிக்கத்தக்கதாக தீகிக்கு மற்றும் ஒநேசிமுவின் அறிக்கையிருந்திருக்கும். இந்தச் செய்தியாளர்கள் கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்கத்தக்கதாக "முழு" (panta,"சகல") மையாக பவுலுக்கு ஏற்படும் காரியங்களை தெரிவிக்கிறவர்களாயிருந்தனர் - பவுல் அனுபவித்த எல்லாவற்றையுங் குறித்தல்ல, ஆனால் பவுலைப்பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய "அனைத்தையும்" அறிவிக்க முடிந்தது.

தேவனுடைய வெளிப்பாட்டை வாய்மொழியாகச் சொல்லியனுப்புவதைச் சார்ந்திராமல் நிருபத்தை எழுதக் காரணம் தீகிக்கோ ஒநேசிமுவோ பவுலுக்கு இருந்த அதிகாரத்தையோ ஏவுதலையோ பெற்றிருக்கவில்லை என்பதால்தான். அவருடைய செய்தியை கொலோசெயருக்கு எழுதிக் கொடுத்தனுப்பியதன் மூலம் சரியான போதனைகளைக் கொடுக்கவும் தொடர்ந்து அவைகளை அவர்கள் மறுபடியும் மறுபடியும் ஒப்பிட்டுப்பார்க்கவும் அது அவசியமாயிருந்தது. கொலோசெயருக்கு எழுதப்பட்ட மகத்தான செய்தியை தேவன் அடுத்தடுத்து வரும் சந்ததியார்கள் பயனடைய விசுவாசத்தோடே பாதுகாத்துவைக்க விரும்பியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிருபத்தின் கடைசிப்பகுதியில் நாம் கேட்கவிரும்பும் அநேக கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படவில்லை. உதாரணமாக, பிலேமோனும் அப்பியாவும் (பிலேமோன் 1, 2) கொலோசெயில் வாழ்ந்திருந்தால், ஒநேசிமுவின் முந்தின சொந்த ஊர் அதுவாக இருந்திருந்தால், பவுல் அவர்களுக்கு ஏன் வாழ்த்துக்களை அனுப்பவில்லை? வாசகர்கள் மாற்கைப் பற்றி பவுல் குறிப்பிட்டவைகளைக் குறித்து இன்று ஆச்சரியப்படலாம், அதே போல எப்பாப்பிரா கொலோசெயர் நிமித்தம் பட்டபாடுகள், நிம்பாவைக் குறித்துச் சொல்லப்பட்ட விசேஷம், பகுத்தறிவுக் காரணத்தால் பரிமாறிக் கொண்ட லவோதிக்கேயருடனான நிருபங்கள், அர்க்கிப்புக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையைக் குறித்தும் வாசகர்கள் அநேக கேள்விகளை எழுப்பலாம், இந்தக் கேள்விகளெல்லாம் இரசியமானவைகளாகவே காணப்பட்டாலும், துவக்கத்தில் பவுலின் நிருபங்களை வாசித்தவர்கள் அவர் என்ன சொல்ல வருகிறார் என்று நிச்சயமாக புரிந்து கொண்டிருந்தார்கள்.

## பயன்பாடு

**சகோதரர்களிடம் அறிவித்தல்**

கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் பவுல் தனது சொந்த விஷயங்களை சேர்க்க வில்லை, தீகிக்கும் ஒநேசிமுவும் கொலோசெயிக்குப் போய்ச் சேர்ந்த போது, அவருடைய நிலையையும் செயல்களைக் குறித்தும் அவர்கள் அறிவிப்பார்கள், ஒரு முழுமையான அறிக்கையை கொடுக்கும்படி பவுல் தனது செய்தியாளர்களை நம்பியிருக்க முடிந்தது.

தான் எப்படியிருக்கிறார் என்று கொலோசெயர்கள் அறிய வேண்டுமென பவுல் ஏன் விரும்பினார்? சில சாத்தியக்கூறுள்ள காரணங்கள், அவர்கள் தனக்காக தங்கள் ஜெபத்தில் எவைகளையும் சேர்க்க வேண்டும் என்பதை அறிய மிகவும் ஆர்வப்பட்டார், சுவிசேஷம் பரவுகின்ற காரியத்தில் காணும் முன்னேற்றத்தால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும், கர்த்தருக்கென்று தான் கடினமாய் உழைக்கும் தன்மை ஒரு முன்மாதிரியைக் கொடுக்க வேண்டும், அல்லது தேவனுடைய வசனத்தின் வளர்ச்சியினிமித்தம் கிடைக்கும் வெற்றியில் தன்னோடு கூட அவர்கள் சந்தோஷப்படவேண்டும். ஒருவகையில் அவருடைய தேவைக்கென பொருளாதார உதவி அனுப்ப ஏதுவாக அல்லது அவரை ஊக்கப்படுத்தும் செய்திகளை அனுப்ப உதவும். இன்றுள்ள உள்ளூர் சபைகள் தங்கள் சுவிசேஷ ஊழியர்களிடத்தில் தொடர்ந்து நட்புறவு வைத்துக்

கொள்ள இவைகளெல்லாம் நல்ல காரணங்கள்.

சுவிசேஷ பணி குறித்த அறிக்கை முக்கியமானது. சுவிசேஷ பணியாளர்களின் சூழ்நிலைகளை மற்ற கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், ஒப்புக்கொடுத்த மனுஷர்கள் தொடர்பு கொள்ளும் நோக்கத்திற்குள் வர வேண்டும்.

*உள்ளூர் சபைகளுக்கு ஊழிய அறிக்கை அவசியமானது.* அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்பட்டால், அவர்கள் ஊழிய பணியில் பெரிதான ஆர்வத்தை எடுத்துக் கொள்வார்கள். என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்து இருப்பார்களானால், அவர்கள் ஊழியத்தைத் தங்கள் ஜெபத்தால் தாங்குவார்கள் மேலும் தேவனிடத்தில் கேட்க வேண்டியவைகள் இன்னது என்பதை புரிந்து கொள்வார்கள்.

பவுல் தனது சுவிசேஷப் பயணங்களை நிறைவு செய்து கொண்டு திரும்பும் போது, அந்தியோகியாவுக்குத் திரும்ப வந்தார், அங்கிருந்துதான் அவர் புறப்பட்டு போயிருந்தார். பவுல் தனது முதலாவது சுவிசேஷப் பயணத்திலிருந்து திரும்பியது குறித்து லூக்கா, "அவர்கள் அங்கே சேர்ந்த பொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து," என்று எழுதினான் (நடபடிகள் 14:27).

சில சுவிசேஷப் பணியாளர்கள் உற்சாகமிழந்து விடுகிறார்கள், ஏனெனில் அவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்பவர்கள் அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை, சுவிசேஷக் களத்தில் இருப்போருக்கும் உதவுகிற ஸ்தல சபைக்குமிடையே தொடர்பு இருந்து கொண்டு இருக்க வேண்டும், அதினால் ஒருவருக்கொருவர் நட்பை வளர்க்க ஏதுவாக்கும்.

*ஊழியத்தையும் ஊழியப் பணியாற்றுபவர்களின் சூழ்நிலைகளையும் புரிந்து கொள்வதே பிரதானமானது.* ஊழியம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கையில், ஊழியர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரு-ம்புவார்கள். அவர்கள் கஷ்டப்படுவார்களானால், அவர்களுக்கு விசேஷித்த உதவியும் ஊக்கமளிப்பும் தேவை, ஆனால் அவர்கள் தங்கள் கஷ்டங்களைச் சொல்லாமல் இருக்கலாம். பொறுப்புமிகுந்த உள்ளூர் சபைகள் தங்கள் சுவிசேஷகர்களுடன் திறந்த மனதுடைய தொடர்பைக் கொண்டிருத்தல் அவசியம்.

*ஒப்புக்கொடுத்த விசுவாசமுள்ளசெய்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு சுவிசேஷப் பணிக்கு உதவுகிற உள்ளூர் சபைகளுக்கும் சுவிசேஷகர்களுக்குமிடையே பயணம் பண்ணும்படி பணித்தல் வேண்டும்.* கூடுமானால், மூப்பர்கள் வருடத்துக்கு ஒருமுறையாகிலும் ஆட்களை அனுப்பி நடப்பிக்கப்பட்டுள்ள ஊழியத்தை பார்வையிட்டு ஊழியத்தில் உட்பட்டவர்களை ஊக்குவிப்பது அவசியம். கடிதப் போக்குவரத்துக்களும், தொலைபேசிகளும், மின் அஞ்சல் தொடர்புகளும் கொண்ட செய்திகள் உதவிகரமானவைதான், ஆனாலும் இவைகள் சுவிசேஷ களத்திற்கு நேரடியாகச் செல்லும் பார்வையாளர்களுக்கு இது இணையாகாது.

பவுல் தனது கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் தன்னுடைய சூழ்நிலையை விவரித்துச் சொல்லியிருக்கலாம், ஆனாலும் பேசப்படும்

வார்த்தைகளைப் போல ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதப்படும் வார்த்தைகள் அழுத்தம் கொடுக்காது. எழுதப்பட்ட ஒரு சிறிய குறிப்பு, ஒரு தனிப்பட்ட நேரடியான செய்தியைப் போல் முழுமையாகவும் ஆர்வமுள்ளதாகவும் இருக்காது. மேலும், ஊழியத்தை புரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு முழுமையான அறிக்கைக்காக செய்தியாளர்களிடம் கேள்விகள் கேட்கப்படலாம்.

சகோதரர்களிடம் ஊழிய அறிக்கையை சமர்ப்பிப்பது வசன ரீதியான முற்பட்ட நிலையையும் உதவி செய்யும் சபைகளுக்கும் சுவிசேஷகர்களுக்குமிடையே ஒரு ஆரோக்கியமான நட்புறவை ஏற்படுத்த முக்கியமானது. கொடுப்பவர்கள் வெளிநாட்டிலிருந்து கேள்விப்படும் நல்ல ஊழியசெய்திகளால் பயனடைவார்கள், சுவிசேஷகர்கள் விசுவாசமுள்ள சகோதரர்களும் சகோதரிகளும் தங்களுக்காகவும் தங்களின் ஊழியப் பணிகளுக்காகவும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து பயனடைகிறார்கள்.

### பாராட்டத்தகு உடன் வேலையாள் தீகிக்கு (4:7-9)

தீகிக்குவின் நற்பண்புகள் எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் விரும்பப் படத்தக்க நற்பண்பாக இருக்கிறது. கிறிஸ்துவுக்காக நாம் மற்றவர்களோடு ஊழியஞ் செய்யும் போது, நாம் அப்படியே வாழ வேண்டியவர்கள். அதினால் நாம் நமது சக ஊழியர்களோடு தீகிக்குவை பவுல் பார்த்த விதத்தில் பார்க்க வைக்க வேண்டும். மேலும், நமது உடன் வேலைக்காரர்களிடத்தில் நற்பண்புகளைக் காணும் போது, நாம் பவுலைப் போலவே அவர்களைப் பாராட்ட வேண்டும், தீகிக்குவைப்பற்றி அவர் குறிப்பிட்டுள்ளவைகளைக் கவனியுங்கள்.

*"பிரியமான சகோதரன்."* கிறிஸ்தவர்கள் அன்பினால் கட்டப்பட்டவர் களாயிருக்க வேண்டியவர்கள், கர்த்தருக்குள் விசுவாசமுள்ள வாழ்க்கையை வாழ்கிறவர்கள் அன்புக்கும் மரியாதைக்கும் தகுதி பெற்றவர்கள். சில வேளைகளில் ஊழியஞ்செய்யத் தேடுகிறவர்கள் பிற ஊழியக்காரர்களை அன்புகூரத் தவறுகிறார்கள், காரணம் பொறாமை. இப்படி ஒருபோதும் நடக்கக் கூடாது, ஏனெனில் இப்படிப்பட்ட உணர்வுகள் போட்டியையும் சண்டைகளையும் கொண்டு வரும்.

*"உண்மையான ஊழியக்காரன்."* உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாய் தரித்திருந்து மரணபரியந்தம் உண்மையுடன் நிலைத்திருக்கிறார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) ஏனெனில் இயேசுவுடன் இருக்கும் புதிய ஜீவனைக் குறித்த நம்பிக்கைதான் (1 கொரிந்தியர் 15:19, 20, 58); பரலோகத்தில் நித்திய ஜீவன் (1 பேதுரு 1:3, 4), மற்றும் இயேசுவுக்கு ஒப்பான மறுரூபமடைதல் (1 யோவான் 3:2, 3) ஆகியன. உண்மையில் உறுதியாய்த் தரித்திருத்தல் என்பது ஒருவர் உபத்திரவத்தைச் சந்திக்கும் போதும், ஏமாற்றங்களை அவிசுவாசமுள்ள சகோதர சகோதரிகளிடமிருந்து சந்திக்கும் போதும் அல்லது பிசாசினிடத்திலிருந்து சோதனைகள் வரும்போதும் அது முடிவதல்ல.

*"உடன் வேலையாள்."* பாவஞ்செய்கிறவர்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள், ஆனால் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதன்

*மூலம் நீதியின் அடிமைகளாகிறார்கள் (ரோமர் 6:17, 18). கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருக்குச் செய்யும் ஊழியத்தை ஒற்றுமையாகச் செய்ய வேண்டும். கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு ஊழியஞ் செய்வதில் பவுலுக்கும் தீகிக்குமிடையே இருந்த ஒற்றுமையை மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும்.*

*தீகிக்கு ஒரு உண்மையுள்ள முன்மாதிரிச் செய்தியாளன். அவனை மாதிரியாகப் பயன்படுத்திக் கொண்டு, கிறிஸ்தவர்கள் பின்வரும் காரியங்களைச் செய்ய பிரயாசப்பட வேண்டும்.*

*(1) நம்பிக்கைக்குப் பாத்திரராயிருங்கள். பவுல் தீகிக்குவை நம்பித்தான் பவுலுக்குப் பிரியமான வகையில் தனது நிலைமையைப் போய் அறிவிக்கச் சொன்னார். மற்றவர்களின் சார்பாகப் பேசுகிறவர்கள் தாங்கள் பேசுவது துல்லியமானதாயிருத்தல் அவசியம் என்பதில் நிச்சயமாய் இருக்க வேண்டும். தவறான அறிக்கை நம் மதிப்பைக் கெடுப்பதோடு உள்ளூர் சபையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். சிலவேளைகளில், கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்லி விடாதபடி (அது உண்மையாகவே இருந்தாலும்கூட) விலகியிருக்க வேண்டும். யாக்கோபு, "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்" என்று எழுதினார் (யாக்கோபு 4:11).*

*(2) ஊக்கமளிப்பவராயிருங்கள். மற்றவர்களைத் தேற்றுகிற விஷயத்தில் தீகிக்குவின் திறமை சிறிதளவு மட்டுமே தெரியவந்துள்ளது. பர்னபா ஆறுதலளிப்பதில் ஒரு சிறப்பான கிறிஸ்தவனுக்குரிய நல்ல உதாரணம். இதனால் தான் அப்போஸ்தலன் அவனை "ஆறுதலின் மகன்" என்றழைத்தார் (நடபடிகள் 4:36). அவர் பவுலை சேர்த்துக் கொண்டு, அப்போஸ்தலர்கள் பவுலை ஏற்றுக் கொள்ளும்படி இசையச் செய்தான் (நடபடிகள் 9:27). அந்நியோகியாவிலிருந்த ஊழியத்தில் உதவி செய்யும்படி பர்னபாவை அப்போஸ்தலர்கள் தெரிவு செய்தபின், அவன் பவுலை ஊழியத்திற்கு உட்படுத்தினான். பின்னதாக, அவன் மாற்கு தன்னை மேம்படுத்த உதவி செய்தான், அதன்மூலம் ஒரு பயனுள்ள கர்த்தருடைய ஊழியக்காரனாக ஆனான் (2 தீமோத்தேயு 4:11).*

*(3) விசுவாசமுள்ள உடன் வேலையாளாயிருங்கள். தீகிக்குவும் ஒநேசிமுவும் ஒரு நல்ல குழுவாக இருந்தனர். ஒநேசிமு ஒரு அடிமையாக இருந்தும் அவர்கள் ஒற்றுமையாக ஊழியஞ் செய்யமுடிந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் சமுதாயத்திலும் அந்தஸ்திலும் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் கர்த்தருக்கு ஒற்றுமையாய் ஊழியஞ்செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களை ஒற்றுமையை ஊழியஞ் செய்ய ஏதுவாக்க தமக்கு ஒப்பாக அவர்களை அவர் மறுரூபமாக்க இயலும்.*